15 0 Eastern University

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## EXTENSION PROGRAMME 2004

## First Semester Examination in Certificate in Business Administration

## CBA 1023 Financial Accounting

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

---

01. திரு மனோகரன் என்னும் தனிவியாபாரியின் 2004 ஜனவரி மாதத்திற்கான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு :

ஜனவரி

1 ரூ. 400000 காசாக மூலதனம் இட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

2 ரூ.100000 காசை மட்டக்களப்பு HNB வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

3 ரூ. 40000 காசுக்குத் தளபாடமும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

4 ரூ. 50000 காசுக்கு வியாபாரத்திற்குரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

5 காசோலை மூலம் ரூ. 10000 உள்வந்த வண்டிக்கூலி செலுத்தப்பட்டது.

6 ரூ. 30000 காசுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

8 ரூ. 24000 காசாகவும் ரூ. 16000 காசோலையாகவும் செலுத்தி ரூ. 40000 வுக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

10 மோகன் ஸ்ரோரிலிருந்து ரூ. 20000 க்கும் குமரன் ஸ்ரோரிலிருந்து ரூ. 30000 வுக்கும் பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.

12 ரூ. 24000 காசுக்கு பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன.

15 நேசனுக்கு ரூ. 13000 வுக்கும் தாசனுக்கு ரூ.15000 வுக்கும் பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன.

17 காசோலை மூலம் ரூ. 4000 வினியோகச் செலவு செலுத்தப்பட்டது.

18 மோகன் ஸ்ரோருக்கு ரூ.1000 பெறுமதியான பொருட்களும் குமரன் ஸ்ரோருக்கு ரூ. 2000 பெறுமதியான பொருட்களும் திருப்பியனுப்பப்பட்டன.

20 விற்பனையாளர்களுக்கு ரூ. 10000 சம்பளம் காசாகச் செலுத்தப்பட்டது.

21 நேசனிடமிருந்து ரூ. 400 பெறுமதியான . Rs.1000

22 மோகன் ஸ்ரோருக்கு அதன் ரூ. 10000 கடனைத் தீர்ப்பதற்கு ரூ. 1000காசுக் கழிவைப் பெற்றுக் கொண்டு ரூ. 9000 காசோலையாகச் செலுத்தப்பட்டது.

24 நேசனிடமிருந்து அவரது ரூ. 9000 கடனை அறவிடுவதற்கு ரூ. 600 காசுக் கழிவினை அனுமதித்த பின்னர் ரூ. 8400 காசோலை பெறப்பட்டது.

25 குமரன் ஸ்ரோருக்கு அதன் கடனில் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு 5% காசுக் கழிவினைப் பெற்றுக் கொண்டு ரூ. 19000 காசோலையாகச் செலுத்தப்பட்டது.

26 தாசனிடமிருந்து அவரது கடனில் ஒரு பகுதியை அறவிடும் பொருட்டு 5% காசுக் கழிவினை அனுமதித்த பின்னர் ரூ. 9500 காசு பெறப்பட்டது

27 சில்லறைச் செலவுகளுக்காக வங்கியிலிருந்து ரூ.1000 எடுக்கப்பட்டது.

28 காசோலை மூலம் ரூ.10000 வாடகை செலுத்தப்பட்டது.

29 ரூ. 30000 காசுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

30 தனிப்பட்ட செலவுகளுக்காக வங்கிலிருந்து ரூ. 3000 எடுக்கப்பட்டது.

31 வங்கிக் கட்டணம் ரூ.1000 அறவிடப்பட்டது.

வேண்டப்படுவது :

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை துணையேடுகளில் பதிந்து பின்னர் அவற்றை பேரேடுகளுக்கு மாற்றி 31 ஜனவரி 2004இல் உள்ளவாறான பரீட்சை மீதியினைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

**02.** கிகான்ஸ் கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ. 10 பெறுமதியான 60000 சாதாரண பங்குகளையும் ஒவ்வொன்றும் ரூ. 10 பெறுமதியான 40000 முன்னுரிமைப் பங்குகளையும் கொண்டமைந்த ரூ.1000000 அனுமதித்த மூலதனத்தைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

30.06.2004

| | வரவு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | | 500000 |
| 10% முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 300000 |
| பங்கு வட்டம் | | 75000 |
| இலாப நட்டக் கணக்கு 01.07.2003 இல் | | 139700 |
| விற்பனைகள் | | 1573000 |
| கொள்வனவுகள் | 725000 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 12700 | |
| வெளிச் சென்ற வண்டிக்கூலி | 15000 | |
| பொது ஒதுக்கம் | | 70000 |
| தொடக்கச் செலவுகள் | 25000 | |
| கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் | 114000 | 75000 |
| திரும்பல்கள் | 10000 | 13000 |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு 01.07.2003 இல் | | 8500 |
| நிர்வாகச் சம்பளங்கள் | 78000 | |
| விற்பனையாளர் சம்பளம் | 55000 | |

| | | |
|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள்/ பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| **01.07.2003 :** | | – |
| காணி கட்டடம் | 700000 | 62000 |
| மோட்டார் வாகனம் | 380000 | 145000 |
| தளபாடப் பொருத்திகள் | 175000 | 60000 |
| இருப்பு 01.07.2003 இல் | 136000 | |
| 15% முதலீடுகள் | 400000 | |
| 10% தொகுதிக் கடன்கள் | | 150000 |
| காப்புறுதி | 25500 | |
| கட்டடப் பராமரிப்பு | 40500 | |
| நிர்வாகச் செலவுகள் | 58100 | |
| தீயழிவு நட்டம் | 10000 | |
| மின்சாரம் | 41900 | |
| விற்பனைத் தரகு | 31500 | |
| பெறுமதி கூட்டிய வரி | 30000 | |
| காசும் வங்கியும் | 65500 | |
| தொகுதிக் கடன் வட்டி | 7500 | |
| பெற்ற முதலீட்டு வருமானம் | | 40000 |
| வருமான வரி ஏற்பாடு 2002/ 2003 இன் இறுதிக் காலாண்டுக்குச் | | 45000 |
| செலுத்திய வருமான வரி | 90000 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரணம் (மொத்தம்) | 20000 | |
| - முன்னுரிமை (மொத்தம்) | 10000 | |
| | **3256200** | **3256200** |

**மேலதிகத் தகவல்கள் :**

i. 30.06.2004 இல் உள்ளவாறான இருப்புக்கள் – ரூ.125000.

ii. பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

கணக்காய்வுக் கட்டணம் - ரூ. 25000

இயக்குனர் கட்டணம் - ரூ. 27000

iii. கடன்பட்டோரில் ரூ. 4000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிவுப்புச் செய்யப்படல் வேண்டும். மிகுதிக் கடன்பட்டோரில் 10% ஐயக் கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

iv. நடைமுறையல்லா சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத்தேய்லுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கட்டடம் (கிரயம் ரூ. 400000) | - | 5% ஆண்டுக் கிரயத்தில் |
| மோட்டார் வாகனம் | - | 10% ஆண்டுக் கிரயத்தில் |
| தளபாடப் பொருத்திகள் | - | 10% ஆண்டுக் கிரயத்தில் |

v. 2000/2001 இன் இறுதிக் காலாண்டுக்கான வருமானவரி ரூ. 40000 ஆக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடப்பாண்டில் செலுத்தப்பட்டது. நடப்பாண்டின் (2003/2004) இறுதிக் காலாண்டுக்கான வருமானவரி ஏற்பாடு ரூ. 25000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

vi. இயக்குனர்கள் பின்வருமாறு தீர்மானித்துள்ளனர் :

a. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 10000 ஐ மாற்றுதல்

b. தொடக்கச் செலவில் 50% ஐ மாற்றுதல்

c. சாதாரண பங்குதாரருக்கு 10% இறுதிப் பங்கிலாபத்தையும் முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய இறுதிப் பங்கிலாபத்தையும் வழங்கல்.

வேண்டப்படுவது :

கிகான்ஸ் கம்பனியின் பின்வரும் நிதிக் கூற்றுக்களை பங்குதாரருக்கு பிரசுரிக்கத்தக்க வகையில் தயாரிக்குக.

i. 30.06.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று

ii. 30.06.2004 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

iii. 30.06.2004 இல் உள்ளவாறான ஐந்தொகை.

(25 புள்ளிகள்)

03. திரு. கந்தசாமி என்னும் சிறு வியாபாரி தனது கணக்கேடுகளை முறைப்படி பேணவில்லை. ஆயினும் அவரால் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| மீதிகள் | 01.01.2003 | 31.12.2003 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 116100 | 120400 |
| இருப்புக்கள் | 80400 | 111200 |
| கடன்பட்டோர் | ? | 178700 |
| வங்கி மீதி | ? | 68800 |
| காசு மீதி | 29600 | 12000 |
| கடன் கொடுத்தோர் | 157700 | 124000 |
| சென்மதி செலவுகள் | 6000 | 3300 |

31.12.2003 இல் முடிவுற்ற ஆண்டுக் காலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட்ட காசும் கழிவுகளும் | 640000 |
| கடன்பட்டோரிடமிருந்து திரும்பல்கள் | 14500 |
| அறவிடமுடியாக் கடன்கள் | 4200 |
| விற்பனைகள் - காசும் கடனும் | 818100 |
| கடன்கொடுத்தோரால் அனுமதிக்கப்பட்ட கழிவுகள் | 7000 |
| கடன்கொடுத்தோருக்குத் திரும்பல்கள் | 4000 |
| மேலதிக மூலதனம் இட்டது (வங்கியில் இடப்பட்டது) | 85000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு (வங்கியில் இடப்பட்டது) | 625000 |
| காசுக் கொள்வனவுகள் | 10300 |
| காசாகச் செலுத்திய செலவுகள் | 95700 |
| காசோலை மூலம் தளபாடக் கொள்வனவு | 4300 |
| காசோலை மூலம் எடுப்பனவு | 131800 |
| வங்கியில் இட்ட காசு | 150000 |
| வங்கியிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்ட காசு | 92400 |
| காசோலை மூலம் கடன் கொடுத்தோருக்குச் செலுத்தியது | 602700 |

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 31.12.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு.

ii. 31.12.2003 இல் உள்ளவாறான ஐந்தொகை.

(25 புள்ளிகள்)

4. I. கணேஷ், சுரேஷ் மற்றும் ரமேஷ் என்போர் இலாப நட்டங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பங்கு கொள்ளும் பங்காளராவர். 36.06.2004 இல் அவர்களது ஐந்தொகை பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் - கணேஷ் | 200000 | காணி கட்டடம் | 400000 |
| - சுரேஷ் | 200000 | தளபாடம் | 150000 |
| - ரமேஷ் | 100000 | இருப்புக்கள் | 50000 |
| பொது ஒதுக்கம் | 100000 | கடன்பட்டோர் | 45000 |
| தினேஷிடம் பெற்ற கடன் | 50000 | காசும் வங்கியும் | 55000 |
| கடன் கொடுத்தோர் | 50000 | | |
| | 700000 | | 700000 |

01.0.2004 இலிருந்து திரு தினேஷ் என்பவரை 1/6 இலாப நட்டப் பங்குடன் பங்குடமையில் அனுமதிப்பதற்கு பங்காளர்கள் உடன்பட்டனர். அவரின் இலாப நட்டப் பங்கு பழைய பங்காளரினால் அவர்களது இலாப நட்ட விகிதப்படி ஏற்றுக் கொள்ளப் பட்டது. மூலதனமாக ரூ. 100000 அவரது கடன் கணக்கிலிருந்து தினேஷின் முழுத் தொகையும் மாற்றப்பட்டு மிகுதி காசாக அளிக்கப்பட்டும் திரட்டப்பட்டது. புதிய பங்காளன் சேர்ந்த திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 60000 ஆக மதிப்பிடப் பட்டது. அதற்கு கணக்கு எதுவும் திறவாமல் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக செம்மையாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பின்வரும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 450000 |
| தளபாடம் | 125000 |
| இருப்புக்கள் | 45000 |
| கடன்பட்டோர் | 43000 |
| கடன் கொடுத்தோர் | 48000 |

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. பங்காளர் மூலதனக் கணக்கு

ii. காசு மற்றும் வங்கிக் கணக்கு

iii. சொத்து மீள் மதிப்பீட்டு கணக்கு

iv. 01.07.2004 இல் உள்ளவாறான ஐந்தொகை

**(12 புள்ளிகள்)**

II. மட்டக்களப்பு விளையாட்டுக் கழகம் ஒன்றின் 31.12.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு பின்வருமாறு :

| கொள்ளல் | ரூபா | கொடுத்தல் | ரூபா |
|---|---|---|---|
| மீதி | 48200 | சம்பளங்கள் | 120000 |
| சந்தாக்கள் | 286000 | வாடகை வரி | 72200 |
| நானாவித வருமானம் | 7000 | நூல்கள் | 10000 |
| நிலையான வைப்பு வட்டி | 20000 | பத்திரிகைகள் சஞ்சிகைகள் | 21720 |
| | | சில்லறைச் செலவுகள் | 102780 |
| | | விளையாட்டு உபகரணம் | 10000 |
| | | மீதி | 24500 |
| | 361200 | | 361200 |

ஏனைய மீதிகள் :

| | 01.01.2003 | 31.12.2003 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சம்பளம் சென்மதி | 7100 | 1700 |
| வாடகை வரி சென்மதி | 8640 | 9730 |
| சஞ்சிகை முற்பணம் | 2260 | 3400 |
| 10% நிலையான வைப்பு | 200000 | 200000 |
| அதன் மீதான வட்டி வருமதி | 5000 | 5000 |
| சந்தா வருமதி | 12630 | 15750 |
| சந்தா முற்பணம் | 5450 | 4550 |
| தளபாடம் | 96000 | 86400 |
| விளையாட்டு உபகரணம் | 72000 | 74800 |
| நூல்கள் | 50000 | 52500 |

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 31.12.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு.

ii. 31.12.2003 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.

(13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)